காலை முரசு

பக்கங்கள்:-19

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 09 | வெள்ளிக்கிழமை | 21.02.2025 | அதிர்வு 203

## வடக்கு பாடசாலைகளுக்கு 27 ஆம் திகதி விடுமுறை!

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் மஹா சிவராத்திரிக்கு மறுநாள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் அறிவித்துள்ளார்.

06



# பாதாள உலகக் குழுக்களுக்கு முழுமையாக முடிவு கட்டப்படும்

## ஜனாதிபதி அநுரகுமார உறுதி

“பொதுமக்களின் பாதுகாப்புக்காக உள்ள உத்தியோகபூர்வ நிறுவனங்களில் சில நபர்கள் வரையில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் விரிவடைந்திருக்கின்றன. இது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. எதிர்காலத்தில் நிச்சயமாக பாதாள உலகக் குழுக்களை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவர சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இதற்காகச் சிறிது காலம் எடுக்கும்.”

- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

06

# வடக்கு மக்களின் உண்மை நிலை அறிந்து விகாரைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்

## இனவாதம், மதவாதத்தைத் தூண்ட எவருக்கும் இடமில்லை என்று ஜனாதிபதி நேற்று தெரிவிப்பு



“வடக்கில் மக்களின் உண்மையான தேவைக்கு அமைய வழிபாட்டு ஸ்தலங்கள் (விகாரைகள்) அமைக்கப்பட்ட விவகாரம் சம்பந்தமான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். குறுகிய அரசியல் இலாபம் தேடும் குழுவினர் இதுபோன்ற சம்பவங்களை அரசியல் முரண்பாடுகளாக்குகின்றனர். இதுபோன்று குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இனவாதம், மதவாதத்தைத் தூண்டுவதற்கு எவருக்கும் இடமளிக்கப்படமாட் டாது”

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பத்தாவது நாளுமன்றத்தின் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் நாடாளுமன்றத்தில்

06




நான்கரை தசாப்த காலத்தையும் தாண்டிய என் பத்திரிகைத் துறை அனுபவத்தின் சில பட்டறிவுகளை அவ்வப்போது பொருத்தப்பபான சமயங்களில் இந்தப் பத்தியில் குறிப்பிட்டு நினைவை மீட்பது தவிர்க்க முடியாதது என்று நினைக்கிறேன். அத்தகைய பட்டறிவுப் பகிர்வு ஒன்று இன்று.

கொழும்பு ஹல்ஸ்ட்ரோபில் நீதிமன்றத்துக்குள் வைத்து சந்தேக நபர் ஒருவரைச் சுட்டுக் கொன்றவர் சிக்கி இருக்கிறார். அவரும் அவருக்கு உதவியவர் என்று கருதப்படும் மற்றொரு இளம் பெண்ணும் சட்டத்தரணிகள் என்ற போலி அடையாள அட்டைகளைச் சமர்ப்பித்தே நீதிமன்ற வளாகத்துக்குள் இலகுவாக நுழைந்து, நடமாடி, இந்தக் கொடூரத்தை அரங்கேற்றி இருக்கின்றார்கள் என்று இப்போது கூறப்படுகின்றது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பெயரில் தயாரிக்கப்பட்ட போலி அடையாள அட்டைகளையே அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் இதற்காக சட்டத்தரணிகள் சங்கத்தின்

06



# செம்மணி மயான மனிதப் புதைகுழியை நேரில் பார்வையிட்டார் யாழ். நீதிவான்!



யாழ்ப்பாணம், செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானப் பகுதியில் மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட இடத்தை யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா நேற்று மதியம் நேரில் சென்று பார்வையிட்டார். **(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)**











# மதுபானசாலைகள்அனுமதி தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## சாணக்கியன் எம்.பி. சபையில் கோரிக்கை

ஜனாதிபதியால் தேர்தல் மேடைகளில் குறிப்பிடப்பட்ட அரசியல் ரீதியாக வழங்கப்பட்ட மதுபானசாலைகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இலங்கை தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை பெரியநிலாவணையில் உள்ள மதுபானசாலை உரிமங்களை இடைநிறுத்தல் தொடர்பான ஒத்திவைப்பு வேளை பிரேரணையை முன்வைத்து நேற்று நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சட்டவிரோத மதுபானசாலைகள் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்கம் அண்மையில் வெளியிட்ட மதுபானசாலை




உரிமையாளர்கள் விபரம் தொடர்பில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வேண்டும் அது தொடர்பில் யார் விசாரணைகளை மேற்கொள்கிறார்கள் என்பது தொடர்பிலான விபரங்களை வெளியிட வேண்டும்."– என்றார்.







# புலமைபரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பால் கௌரவிப்பு

**(பா.சதீசன்)**

புலமைபரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, 70 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப்பெற்ற மாணவர்கள், சமூகப் பணியாளர்கள், கிராம அலுவலர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வற்றாப்பளை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்டத்தின் தலைவர் ஜுட்சனின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்த கௌரவிப்பு நிகழ்வில் 2024 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வற்றாப்பளை, கேப்பாபிலவு பாடசாலை மாணவர்கள் 7 பேர், 70 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்ற 27 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், நடனத்துறையில் வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவர்கள் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற காரணமாக இருந்த நடன ஆசிரியர் க.ஜஸ்மினியும், இடமாற்றம் பெற்று சென்ற கிராம அலுவலர் ஜேசுரட்ணம், புதிதாக கிராம அலுவலராக பதவியேற்ற அஜித்திரா, சஜாத் மற்றும் வற்றாப்பளை கிராம அலுவலராக நியமிக்கப்பட்ட கரிகாலன் மற்றும் பல்வேறுபட்ட சமூகப் பணிகளில் ஈடுபட்டு உதவிகள் புரிந்தவர்களும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் க.தவராசா தலைமையில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக சந்நதியார் ஆச்சிரம குருக்கள் மோகனதாஸ் சுவாமிகள், சிறப்பு விருந்தினராக வற்றாப்பளை பாடசாலை அதிபர் க.திருக்குமரன், கிராம அலுவலர் கரிகாலன், முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் கவாஸ்கர், தாய் தமிழ் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் ரூபன், உதய சூரியன் முன்பள்ளி ஆசிரியர்கள், சமூக தொண்டர்கள், மகளிர் அமைப்பு குழுக்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.









# கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கான 24 மணி நேர சேவை மேற்கொள்ளப்படும்




குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் ஒரு நாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கான 24 மணி நேர சேவையை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளது.

இந்த 24 மணி நேர சேவையானது, ஒரு நாளில் கடவுச் சீட்டு வழங்கும் சேவைக்கு மட்டுமே வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

அந்த சேவைக்கான பதிவு வாரத்தில் திங்கள் காலை 6 மணி முதல் வெள்ளிக்கிழமை மதியம் 12 மணி வரை மட்டும் மேற்கொள்ள முடியுமென குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.










# வட்டுவாகல் நந்திக்கடலில் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட ஆறு பேர் கைது

**(பா.சதீசன்)**

வட்டுவாகல் நந்திக்கடல் களப்பில் சட்டவிரோதமாக அனுமதியற்ற முறையில் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரு சிறுவர்கள் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வட்டுவாகல் நந்திக்கடல் களப்பில் சட்ட விரோதமாக அனுமதியற்ற சட்ட விரோத படகு, வலைகள், கூட்டு வலைகளை பயன்படுத்தி தொடர்ச்சியாக தொழிலில் ஈடுபட்டதை தொடர்ந்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இரு சிறுவர்கள் என்பதால் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஏனைய நால்வரையும் நீதிமன்றில் முற்படுத்தி 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நீர்வள திணைக்களத்தின் ஒத்துழைப்புடன், முல்லைத்தீவு மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கமும், வட்டுவாகல் கடற்தொழில் கூட்டுறவு சங்கத்தினரும், செல்வபுரம் கடற்தொழில் கூட்டுறவு சங்கத்தினரும் இலங்கை கடற்படையினரும் இணைந்து சட்டவிரோத தொழிலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.









# திட்டமிட்ட குற்றச்செயல் விசாரணைகளை நீதிமன்றுக்கு அப்பால் முன்னெடுக்க திட்டம்




பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் தொடர்பான வழக்கு விசாரணைகளை எதிர்காலத்தில் நீதிமன்றத்திற்கு அப்பால் முன்னெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து நீதி அமைச்சுடன் கலந்துரையாடவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.


கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை கூறினார்.

நீதிமன்றத்தில் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் உரிய நடைமுறைகளுக்கமைய பாதுகாப்பு படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றத்திற்குள் துப்பாக்கிகளை பயன்படுத்துவதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு அனுமதியில்லை எனவும் உட்பிரவேசிக்கும் சட்டத்தரணிகள் சோதனைக்குட்படுத்தப்படமாட்டார்கள் எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

புலனாய்வு பிரிவினர் வழங்கும் தகவல்களின் அடிப்படையில் பொதுமக்களுக்கான பாதுகாப்பு திட்டங்களை பலப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# கவனம் செலுத்த வேண்டிய மட்டத்தில் வெப்பநிலை




நாட்டின் பல பகுதிகளில் மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை அடுத்த 24 மணி நேரத்திற்குக் கவனம் செலுத்த வேண்டிய மட்டத்தில் இருக்கும் என்று வளிமண்டளவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேல் மாகாணங்களிலும், இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இந்த நிலைமை ஏற்படக்கூடும் என்று திணைக்களம் அறிவித்துள்ளது.

பணியிடங்களில் இருப்பவர்கள் போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும் என்றும், வீட்டில் தங்கியிருக்கும் முதியவர்கள் மற்றும் நோயாளிகள் இது குறித்து கவனமாக இருக்க வேண்டும் என்றும் சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அலுவலர் யாரும் கைது செய்யப்பட வில்லை.

ஆனால் யுத்த காலத்தில் இத்தகைய விடயங்களில் நிலைமை வேறுவிதமாக இருந்தது. அடையாள அட்டை பற்றிய ஒரு விடயத்தையே இன்று குறிப்பிட விரும்புகிறேன்.

1991 ஜுன் 21 ஆம் திகதி கொழும்பு பிளவர் வீதியில் இருந்த கூட்டுப் படைத் தலைமையகக் கட்டடம் மீது தற்கொலைக் கொண்டு தாக்குதலாளர் மூலம் வாகனக் குண்டு ஒன்று வெடிக்க வைக்கப்பட்டு பெரும் தாக்குதல் நடத் தப்பட்டது. இலங்கையின் முப்படைக ளையும் பொலிஸையும் ஒன்றிணைத்துப் போர் நடவடிக்கைகளை முன்னெடுக் கும் கூட்டுப்படைத் தலைமையகம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 60 பேர் வரை உயிரிழந்தனர். 85 பேர் வரை படுகாயம் அடைந்தனர்.

சில காலத்தின் பின்னர் இந்தச் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்படும் (குண்டு) வரதன் என்பவர் மலையகத்தில் (தலவாக்கலை யில் என்று நினைவு. அது சரியோ தெரிய வில்லை) ஒரு வீட்டைப் படையினர் சுற்றி வளைத்த போது சயனைட் உட்கொண்டு சாவடைந்தார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகர் பெ.சந்திரசேகரனின் வீடு அது என்று கூறப்படுகின்றது. அதை அடுத்து சந்திரசேகரனும் அவரது சகாக் கள் சிலரும் பயங்கரவாதத் தடைச் சட்டத் தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டனர். காவலில் இருந்த படியே 1994 பொதுத் தேர்தலில் மண்வெட்டிச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் சந்திரசேகரன். பின்னர் அவரின் ஓர் ஆசன ஆதரவுடன்தான் சந்திரிகா அம்மையார் அந்தத் தேர்த லில் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சி அமைக்க முடிந்தது. பின்னர் நடந்த விசாரணைகளில் சந்திரசேகரன் குற்றமற்றவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டார்.

ஆனால் வரதன் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்ட போது அவருக்கும் சந்திரசேகரனுக்கும் உள்ள தொடர்பு குறித்து பாதுகாப்புத் தரப்பினர் சந்திரசேகரனைக் குடைந்தனர்.

வரதனை புலி உறுப்பினர் என்று தனக்குத் தெரியாது என்றும், அவர் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியா கும் 'உதயன்' பத்திரிகையின் தென்னி லங்கை செய்தியாளர் என்ற முறையி லேயே தம்மோடு அறிமுகமாகினார் என்றும் சந்திரசேகரன் வாக்குமூலம் அளித்திருக்கிறார் எனக் கொழும்பில் ஊடகங்கள் செய்து வெளியிட்டன. வரத னிடமிருந்து 'உதயன்' நிறுவனத்தின் செய்தியாளர் அடையாள அட்டை கைப் பற்றப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகி யிருந்தன.

அப்போது யாழ்குடா நாடு விடுத லைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அங்கிருந்து வெளியாகும் 'உதயன்' பத் திரிகையில் பதில் கூற வேண்டிய பொறுப்பான பதவிகளில் நாங்கள் கடமையாற்றிக் கொண்டிருந்தோம். கொழும்பில் இவ்வாறு செய்தி வெளி யாகி இருப்பது குறித்து எங்களுக்கு உரிய தரப்புகள் மூலம் தகவல் தரப்பட்டது. எங்களுக்கு தெரியாமலேயே உதய னின் பெயரில் அடையாள அட்டை ஒன்று தயாராகி இருப்பது எமக்கு ஆச்சரி யத்தைத் தந்தது. ஆயினும் இச்சமயத் தில் உதயனைச் சேர்ந்த - பொறுப்பான பதவிகளில் இருக்கின்ற - யாராவது தென்னிலங்கைக்கு வந்தால் அவர்கள் கைதாகக் கூடிய ஆபத்து இருப்பதாகக் கொழும்பிலிருந்து எங்களுக்குத் தகவல் கிடைத்தது. அதனால் அச்சமயத்தில் கொழும்புப் பக்கம் தலைவைப்பதை நாங்கள் தவிர்த்துக் கொண்டோம்.

இப்போது இலங்கை சட்டத்தரணிகள் சங்க அடையாள அட்டையை கொலை யாளி ஒருவர் பயன்படுத்தியமைக்காக சட்டத்தரணிகள் சங்கத்தின் நிர்வாகிகள் யாரும் விசாரணைக்கு உட்படுத்தப்ப டவோ கைது செய்யப்படவோ இல்லை.

ஆனால் 1991 இல் கூட்டுப் படைத் தலைமையகத் தாக்குதலின் பின்னர் வரதன் கொல்லப்பட்ட சமயம் உதய னில் பொறுப்புள்ள அலுவலர் யாராவது கொழும்பில் இருந்திருந்தால் நிச்சயமாக அவர்களும் பயங்கரவாதத் தடுப்புச் சட் டத்தின் கீழ் கைதாகி சிறை வைகப் பட்டிருப்பார்கள் என்பது உறுதி. ஏனெ னில் பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழர் கள் தொடர்பில் அப்படித்தான் கையா ளப்பட்டது...!

# தாளையடியில் கஞ்சாவுடன் ஒருவர் வசமாகச் சிக்கினார்

(எஸ்.ரகுதீஸ்)

யாழ். வடமராட்சி கிழக்கு, தாளை யடி பகுதியில் வைத்து கேரள கஞ்சாவு டன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய் வுத் துறையினருக் குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப் படையில் கிளிநொச்சி மாவட்ட விசேட அதிரடிப் படையினரும், மருதங்கேணிப் பொலிஸாரும் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை நேற்று மேற்கொண் டனர்.

கைது செய்யப்பட்டவர் வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு பகுதியைச் சேர்ந் தவராவார். அவரிடம் இருந்து 5 கிலோ 660 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப் பட்டுள்ளது.



கேரள கஞ்சாவுடன் கைது செய்யப் பட்டவர் மேலதிக சட்ட நடவடிக்கைக் காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## வடக்கு மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்று நடைபெற்றது. இதன்போது, வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட் டுள்ள சில வழிபாட்டு ஸ்தலங்களை (விகாரைகள்) அடிப்படையாகக் கொண்டு இன மற்றும் மத ரீதியான பிளவுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக் கின்றன என்று சில நாடாளுமன்ற உறுப் பினர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இதன்போது, கருத்து வெளியிட்ட ஜனாதிபதி,

"மதவாதம் மற்றும் இனவாதம் என் பன அரசியலில் இருந்து முற்றாக நீக்கப் பட வேண்டும். வடக்கில் மக்களின் உண் மையான தேவைக்கு அமைய இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். குறுகிய அரசியல் இலாபம் தேடும் குழு வினர் இதுபோன்ற சம்பவங்களை அரசி யல் முரண்பாடுகளாக்குகின்றனர்.

இதுபோன்று குறுகிய அரசியல் இலா பங்களுக்காக இனவாதம், மதவாதத்தைத் தூண்டுவதற்கு எவருக்கும் இடமளிக்கப் பட மாட்டாது." - என்றார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங் களில் இராணுவ முகாம்களுடன் கூடிய காணிகளை மீண்டும் உரிமையாளர் களுக்கு வழங்குவது தொடர்பிலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி யின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர

இதற்குப் பதிலளித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்,

"வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி நாடு முழுவதிலும் முப்படையினரின் பாவனை யில் உள்ள காணிகள் தொடர்பில் மீண் டும் மதிப்பாய்வு மேற்கொண்டு காணி களை விடுவிப்பது குறித்து எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கப்படும்." - என்றார்.

## வடக்கு பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை மஹா சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப் படவுள்ளது. இதையொட்டி மறுநாள் 27 ஆம் திகதி வியாழக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலாக வடக்கு மாகாணத் தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளி லும் மார்ச் மாதம் முதலாம் திகதி சனிக் கிழமை கல்வி நடவடிக்கைகள் நடை பெறும் என்றும் வடக்கு மாகாண ஆளுநர் தெரியப்படுத்தியுள்ளார்.

## பாதாள உலகக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பத்தாவது நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் அவருடைய தலை மையில் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றபோதே ஜனாதிபதி மேற் கண்டவாறு கூறினார்.

நீதிமன்ற வளாகங்களின் பாதுகாப்பு தொடர்பில் இங்கு கருத்துத் தெரிவித்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, இது தொடர்பில் முன்மொழிவொன்று தயாரிக் கப்பட்டுள்ளது என்றும், எதிர்காலத்தில் சட்டத்தரணிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் சோதனையிடுவதற்கும், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நீதிமன்ற வளாகத்தின் பாதுகாப்பை பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

தேசிய அனர்த்தக் குழுவை ஸ்தாபிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதற்கான நட வடிக்கையை விரைவில் பூர்த்தி செய்யு மாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் பிரதி சபாநாயகர் (வைத்தியர்) ரிஸ்வி சாலி, பாதுகாப்பு பிரதி அமைச்சர் (மேஜர் ஜெனரல்) அருண ஜயசேகர (ஓய்வுபெற்ற), அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப் பினர்கள் உள்ளிட்ட பலரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா (ஓய்வு பெற்ற), முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறு வனங்களின் அதிகாரிகள், நாடாளுமன்ற பதவியணித் தலைமை அதிகாரியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# காலநிலை தொடர்பில் பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சு பரிந்துரைகள் முன்வைப்பு

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், நாட்டில் நிலவும் அதிக வெப்பநிலையை கருத்தில் கொண்டு பாடசாலை நடவடிக்கைகளை எவ்வாறு தொடர வேண்டும் என்பது குறித்து அறிவுறுத்தி, அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் பரிந்துரைகள் அடங்கிய கடிதத்தை கல்வி அமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

அதிக வெப்பநிலை உள்ள நாட்களில் மாணவர்கள் வெளிப்புற, மற்றும் மைதான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும்.

பாடசாலை இடைவேளையின் போது வெளியில் அதிக சூரிய ஒளியில் நேரத்தை செலவிடுவதையும், விளையாடுவதையும் தவிர்க்க வேண்டும்.

சோர்வைப் போக்க அதிக தண்ணீர் குடிப்பதும், இரண்டு சிறிய இடைவேளைகளை எடுத்துக்கொள்வதும் சிறந்தது.

மிகவும் அவசியமான சூழ்நிலைகளைத் தவிர, மதிய நேரத்தில் அதிக வெப்பநிலையின் போது மாணவர்களை வெளியே அழைத்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

போன்ற முக்கிய பரிந்துரைகள் குறித்த கடிதத்தில் சேர்க்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சபைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்கு அமைச்சரவை அனுமதி!

அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் செயன்முறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணி முகாமைத்துவத்துக்கான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையிலான குழுவினரால் இரண்டாவது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கை மூலம் 11 அமைச்சுகளின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் 05 மாகாண சபைகளில் நிலவும் 4,987 வெற்றிடங்களில் 2,003 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விதந்துரை சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அதற்கமைய மேற்படி விதந்துரையை அமுல்படுத்துவதற்காக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

# யாழ் பண்ணை நடைபாதைப் பகுதியில் நாளை திறந்தவெளிக் கொண்டாட்டம்!

**யோகா, பாரம்பரிய விளையாட்டுக்கள், உணவுகள், சும்பா உடற்பயிற்சி நடனம்**




யாழ்ப்பாணம் பண்ணை நடைபாதைப் பகுதியில் யோகாசனம், சும்பா உடற்பயிற்சி நடனம், பாரம்பரிய விளையாட்டுக்கள், மெல்லிசை - பொப்பிசை பாடல்கள் என்பவற்றுடன் திறந்தவெளிக் கொண்டாட்டம் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

பண்ணை ஆரோக்கிய சதுக்கம் பகுதியில் நடைபெற்று வரும் யோகாசனப் பயற்சிகளின் ஓராண்டு நிறைவையொட்டி, சிகரம் நிறுவனத்தின் சுற்றுலா சேவைப் பிரிவான படலை அமைப்பு, திறந்தவெளிகள், பூங்காக்கங்கள், சிறு சந்தைகளை பொதுமக்கள் ஊடாட்டங்களின் மூலம் மேம்படுத்தும் ESAF Global Canada நிறுவனத்துடன் இணைந்து இதனை ஒழுங்குபடுத்தியுள்ளது.

முன்னதாக, கடந்த 15 ஆம் திகதி யாழ் கொசி விடுதியில் யோகாசனம், பாரம்பரிய ஆரோக்கிய உணவுகள், சித்த -ஆயுர்வேத மருத்துவ சேவைகளை வழங்கும் “ஆயுசு 100 - பரிபூரண நலவாழ்வு மையம்“ உருவாக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து, இந்த திறந்தவெளிக் கொண்டாட்டம் சிகரம் நிறுவனத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், யாழ்ப்பாண பாணியிலான நண்டுக்கறியுடன் புட்டு, குண்டுத்தோசை, குரக்கன் பூரி, குரக்கன் கழி ஆகிய தமிழர் பாரம்பரிய ஆரோக்கிய உணவுகளைச் சுவைத்தபடி, கிடுகு பின்னுதல், கிட்டிப்புள், கயிறிழுத்தல் உள்ளிட்ட பாரம்பரிய விளையாட்டுக்களிலும், இலகு யோகாசன பயிற்சிகள் மற்றும் சும்பா உடற்பயிற்சி நடனத்திலும் பார்வையாளர்கள் இணைந்துகொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறியத்தந்துள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தையிட்டி: முடிவு எப்போது?

தற்போதைய நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு அமைச்சுத் தொடர்பான ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் நேற்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவின் தலைமையில் நடைபெற்ற போது வடக்கு, கிழக்கு நிலமைகள் தொடர்பில் முக்கிய கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன எனத் தெரிகின்றது.

இது தொடர்பான விடயம் நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்போது இராணுவ முகாம்களாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் விடுவிப்பது தொடர்பில் இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவலையுடன் கேள்வி எழுப்பி இருக்கிறார்கள்.

இதற்குப் பதிலளித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வடக்கு, கிழக்கில் மட்டுமின்றி நாடு முழுவதிலும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு, அவற்றின் அடிப்படையில் அந்த நிலங்களை விடுவிப்பது தொடர்பில் புதிய தீர்மானங்கள் எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டு இருக்கின்றார்.

அதேசமயம் இராணுவ தரப்பினரால் நடத்தப்படும் வணிகங்கள் மற்றும் சுற்றுலாத் துறையிலான முதலீடுகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் சுட்டிக் காட்டினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, இவை தொடர்பில் ஆய்வு நடத்தப்பட்டு, பொருளாதார நன்மைகளை அடைவதற்கு இந்த வர்த்தகங்களை பயன்படுத்துவது குறித்து உரிய தீர்மானங்கள் எடுக்கப்படும் எனக் கூறியிருக்கிறார்.

வடக்கு மாகாணத்தில் கட்டப்பட்டுள்ள சில விகாரைகளின் அடிப்படையில் இன,மத பிளவுகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன என நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கு தெரிவித்தனர் என்று நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்கள அறிக்கை தெரிவிக்கின்றது.

இதற்குப் பதில் அளித்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா, இன, மதத் தீவிரவாதம் அரசியலில் இருந்து முற்றாக அகற்றப்பட வேண்டும் என வலியுறுத்தினார். அந்தப் பிரதேசங்களில் வசிப்பவர்களின் உண்மையான அபிலாசைகளின் அடிப்படையில் இவ்வாறான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என அங்கு அவர் குறிப்பிட்டு இருக்கிறார்.

குறுகிய அரசியல் ஆதாயங்கள் தேடும் சில குழுக்கள் இவ்வாறான சூழ்நிலைகளை அரசியல் மோதல்களாக மாற்ற முனைகின்றன என அவர் சுட்டிக் காட்டினார். எனவே அரசியல் ஆதாயத்திற்காக இன, மத பிளவுகளைத் தூண்டுவதற்கு எவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்ங்கு உறுதி கூறியுள்ளார்.

அந்தப் பிரதேசங்களில் வசிப்பவர்களின் உண்மையான அபிலாசைகளின் அடிப்படையில் இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பார் என்ற ஜனாதிபதியின் கருத்தை நடைமுறைப்படுத்துமாறு வடக்கில் கையிட்டியில் சட்டவிரோதமாக - அடாத்தாக - கட்டப்பட்ட விகாரைக்கு எதிராகப் போராடும் அந்தப் பிரதேசவாசிகள் ஜனாதிபதியைக் கோருகிறார்கள்.

இது விடயத்தில் பிரதேசவாதிகளின் கருத்தை உள்வாங்கி நடவடிக்கை எடுப்போம் என்ற ஜனாதிபதியின் வாக்குறுதி நடைமுறைப்படுத்தப்படுமா? அது எப்போது? ஆண்டவனுக்குதான் வெளிச்சம்!

# கனேமுல்ல சஞ்சீவவின் உடலை தாயாரிடம் ஒப்படைக்க உத்தரவு



கொழும்பு, புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்துக்குள் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பாதாள உலகக் குழுவின் தலைவரான கனேமுல்ல சஞ்சீவவின் மரணம் குறித்து விசாரணை நடத்துமாறு கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி, சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பொலிஸ் பிணவறையில் நேற்று விசாரணை ஆரம்பமாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைக்குப் பின்னர் அவரது உடலை அவரது தாயாரிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அவரது உடலை நல்லடக்கம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பொலிஸ் பிணவறையில் வைக்கப்பட்டுள்ள கனேமுல்ல சஞ்சீவவின் உடலை அவரின் உறவினர்கள் சிலர் நேற்று பார்வையிட்டனர்.

# கனேமுல்ல சஞ்சீவ படுகொலை: பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது





கொழும்பு, புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்துக்குள் வைத்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாதாள உலகக் கும்பலின் முக்கியஸ்தர் கனேமுல்ல சஞ்சீவ என்பவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் அதிகாரி ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 25 வயதுடைய பொலிஸ் அதிகாரி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான பொலிஸ் அதிகாரி பாதாள உலகக் கும்பலின் முக்கியஸ்தர் கனேமுல்ல சஞ்சீவ என்பவரைச் சுட்டுக்கொலை செய்வதற்குச் சட்டத்தரணி வேடத்தில் சென்ற பிரதான சந்தேகநபருக்கு உதவி செய்த பெண்ணுடன் தொலைபேசியில் தொடர்புகளைப் பேணி வந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# தமிழ்ப் பத்திரிகை உலகிலும் தனக்கென்று தனித்துவத்தைக் கொண்ட எஸ்.பி.சாமி ஐயா



வீரகத்தி தனபாலசிங்கம்

"தினக்குரல்" பத்திரிகை நிறுவனத்தில் நான் நெருக்கமாக பணியாற்றிய இருவருக்கு ஒரு பத்து நாள் இடைவெளியில் அஞ்சலிக் குறிப்புக்களை எழுதவேண்டிய துரதிர்ஷ்டவசமான நிலை எனக்கு.

பெப்ரவரி 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் காலமான முன்னாள் "ஞாயிறு தினக்குரல்" ஆசிரியரும் நெருங்கிய நண்பனுமான பாரதி இராஜநாயகத்தின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்டுவிட்டு கொழும்பு திரும்பி இரு நாள்கள் கடந்து போவதற்கு இடையில் கடந்த புதன்கிழமை (பெப்ரவரி 19) தினக்குரல் தாபகர் எஸ்.பி. சாமி அவர்கள் அதே திருநெல்வேலியில் காலமான துயரமிகு செய்தி வந்து சேர்ந்தது. அவருக்கு இறுதி மரியாதை செலுத்தவும் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டு வழியனுப்பவும் மீண்டும் யாழ்ப்பாணம் பயணமாகிறோம்.

செல்லையா பொன்னுச்சாமி என்பது அவரது முழுப்பெயர். ஆனால், எஸ்.பி. சாமி என்றுதான் நாடும் சமூகமும் அவரை அறிந்து வைத்திருக்கிறது. எனக்கும் அவருக்கும் இடையிலான ஊடாட்டத்துக்கும் தினக்குரலுக்கும் ஒரே வயது. வடக்கிலும் தலைநகர் கொழும்பிலும் பிரபலமான ஒரு வர்த்தகப் பிரமுகர் என்ற வகையில் சாமி அவர்களை நான் ஏற்கெனவே அறிந்து வைத்திருந்த போதிலும், தினக்குரலை அவர் ஆரம்பித்திருக்காவிட்டால் அவருக்கும் எனக்கும் இடையில் உறவுமுறை ஏற்படுவதற்கு வாய்ப்பிருந்திருக்காது.

வீரகேசரி வாரவெளியீட்டின் ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றிய காலஞ்சென்ற பொன். இராஜகோபால் மூலமாகத்தான் எனக்கும் சாமி அவர்களுக்கும் அறிமுகம் ஏற்பட்டது. தலைநகரில் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் சாமி அவர்களுக்கு ஏற்கெனவே இருந்திருந்தாலும், இராஜகோபாலுடனான சந்திப்பையடுத்தே அந்த எண்ணம் விரைவாக நடைமுறைச் சாத்தியமாவதற்கான வழி பிறந்தது எனலாம். தினக்குரலில் என்னைப் போன்றவர்களின் இணைவு இராஜகோபாலின் முயற்சியின்

தொடர்ச்சி▼

# தமிழ்ப் பத்திரிகை உலகிலும் தனக்கென்று தனித்துவத்தைக் கொண்ட எஸ்.பி.சாமி ஐயா

தொடர்ச்சி▲

விளைவானது.

பத்திரிகையாளன் என்ற வகையில் எனது தொழில் வாழ்க்கைப் பயணத்தின் இடைநடுவில் சாமி அவர்களை சந்தித்த நாள் தொடக்கம் அவர் எனக்கு இன்னொரு தந்தை. எனக்கு மாத்திரமல்ல, என்னைப் போன்று தினக்குரலில் பணியாற்ற வந்த இளையவர்களுக்கு எல்லாம் அவர் தந்தை என்று கூறுவதே பொருத்தம். நெருக்கடிகள் ஏற்பட்ட வேளைகளில் எல்லாம் அவர் நிலைகுலையாமல் உறுதியுடன் நின்று, நாம் துவண்டுபோகாமல் வழிகாட்டிய பாங்கை இந்தச் சந்தர்ப்பத்தில் கண்கள் பனிக்க நினைத்துப் பார்க்கிறேன்.

ஏற்கெனவே பல வருடங்கள் பத்திரிகைத்துறையில் பணியாற்றியவர்களைக் கொண்ட, ஒப்பீட்டளவில் இளவயதிரான பலரை உள்ளடக்கிய குழாம் ஒன்று அதன் எதிர்காலத்தை சாமி அவர்களிடம் ஒப்படைத்த வண்ணமே தினக்குரலில் பணியாற்றத் தொடங்கியது. அவர்களில் சிலர் தங்களது எதிர்காலம் கேள்விக் குறியாகி விடுமோ என்று கவலை கொள்ள ஆரம்பித்த வேளைகளில் எல்லாம் அவர்களுக்கு தைரிய மூட்டுவதற்கு எமக்கு தெம்பைத் தந்தது சாமி அவர்களின் மன உறுதிதான்.

வர்த்தகத் துறையில் சாமி அவர்கள் கைவைக்காத கிளையே இல்லை என்று கூறலாம். அச்சுத் துறையிலும் அவர் பெயரெடுத்தவராக விளங்கிய போதிலும், ஏற்கெனவே பல தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்த நிலையில், இன்னொரு பத்திரிகையை ஆரம்பிப்பது என்பது அதுவும் உள்நாட்டுப் போர் உச்சக்கட்டத்தில் இருந்த கடந்த நூற்றாண்டின் 90 களின் நடுப்பகுதியில் பாரிய சவால்மிக்க பணியாக இருந்தது. அந்தச் சவாலை துணிச்சலுடன் எதிர்கொண்டு கால்நூற்றாண்டைக் கடந்து தினக்குரல் பயணிக்கிறது என்றால் அதற்கு சாமி அவர்கள் எமக்கு தந்த ஊக்கமும் தைரியமும் அவற்றின் விளைவாக ஊழியர்களுக்கு ஏற்பட்ட உத்வேகமுமே அடிப்படைக் காரணங்கள்.

நான் முதலில் தினக்குரலில் செய்தி ஆசிரியராக பணியாற்றினேன். இராஜகோபால் எமது வழிகாட்டி. ஆறுமுகம் சிவனேசச்செல்வன் பிரதம ஆசிரியர். தினக்குரலின் முதலாவது இதழ் ஞாயிறு பத்திரிகையாக 1997 ஏப்ரில் 6 ஆம் திகதி வெளியானது. அதை வெளிக்கொணருவதற்கு எமது குழாம் சில வாரங்களாக கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. பத்திரிகை வெற்றிகரமாக வெளிவந்ததால் மகிழ்ச்சியடைந்த போதிலும், ஆசிரியபீட உறுப்பினர்கள் சற்று களைத்துப் போயிருந்தார்கள்.

மறுநாள் திங்கட்கிழமை தினசரிப் பத்திரிகையை வெளியிடுவதை தாமதித்து சில வாரங்களுக்கு பிறகு தினசரியை வெளியிடுவோம் என்று ஆசிரியபீட உறுப்பினர்களில் சிலர் யோசனை கூறினார்கள். ஆனால், சாமி அவர்கள் அதற்கு இணங்கவில்லை. திட்டமிட்டபடி திங்கட்கிழமை தினசரி தினக்குரல் வெளிவந்தேயாக வேண்டும் என்பதில் அவர் காட்டிய உறுதிப்பாடு சோர்வடைந்திருந்தவர்களை தட்டியெழுப்பியது. அச்சியந்திரப் பிரிவில் இருந்து தினசரிப் பத்திரிகையின் முதல் பிரதிகளை அவரே மகிழ்ச்சியுடன் எடுத்துவந்து ஆசிரிய பீடத்துக்கு தந்தார்.

தினக்குரலின் உய்வின் சாத்தியம் குறித்து ஆரம்ப நாள்களில் "பல்லி" சொன்ன பலருக்கும் நாளைடைவில் ஏமாற்றமே மிஞ்சியது. தலைநகரில் இருந்து வெளிவரும் இன்னொரு தமிழ்ப்பத்திரிகையாக தினக்குரல் தன்னை குறுகிய காலத்திற்குள்ளேயே நிலைநிறுத்தக் கூடியதாக இருந்தது. அதன் வளர்ச்சிக்காக தாபகர் சாமி அவர்கள் தொடக்கம் கடைநிலை ஊழியர் வரை கடுமையாக உழைத்தமையைக் கண்ட சாட்சிகளில் ஒருவன் நான். பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை நடுநிசியிலும் சாமி அவர்கள் அலுவலகத்துக்கும் அச்சியந்திரப் பகுதிக்கும் இடையே இளைஞர்களே வியக்கும் வண்ணம் ஓடிக்கொண்டிருப்பார். ஆரம்பக்கட்டத்தில் பத்திரிகையை நாடுபூராவும் விநியோகிப்பதற்கான பணிகளில் அவரும் புதல்வர்களும் கூட முழுமூச்சாக ஈடுபட்டமையைக் கண்டவன் நான். அவரின் குடும்பமே பத்திரிகையுடன் மாய்ந்தது.

ஒரு கட்டத்துக்குப் பிறகு தலைநகரில் இருந்து மாத்திரமல்ல, யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்தும் தினக்குரலின் பிராந்தியப் பதிப்பு வெளியானது. குடாநாட்டை நாட்டின் ஏறைய பாகங்களுக்கும் வெளியுலகிற்கும் காட்டுவதற்கும் நாட்டின் ஏனைய பாகங்களையும் வெளியுலகையும் குடாநாட்டுக்கு காட்டுவதற்குமான ஒரு முயற்சியாக அமைந்த அந்தப் பிராந்தியப் பதிப்பு சாமி அவர்களின் விடாமுயற்சியினால் வெற்றி கண்டது.

குடாநாட்டில் இருந்து பத்திரிகைகள் ஏற்கெனவே வெளிவந்து கொண்டிருந்தன. ஆனால், தலைநகரில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று அதன் குடாநாட்டுப் பதிப்பை முதன்முதலாக வெளியிட்ட சாதனையை நிகழ்த்தியது தினக்குரலேயாகும்.

அந்த வெற்றியின் பின்னால் நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளினதும் ஊழியர்களின் அர்ப்பணிப்புச் சிந்தையுடனான உழைப்பும் இருந்தது என்ற போதிலும், இடர்பாடுகள் மிகுந்த குடாநாட்டுச் சூழ்நிலைகளுக்கு மத்தியில் சாமி அவர்கள் தந்த ஊக்கமே ஊழியர்களுக்கு உத்வேகத்தைக் கொடுத்தது. நிதி நெருக்கடிகளுக்கு மத்தியிலும், அவர் நிலைகுலையாமல் வெளிக்காட்டிய உறுதிப்பாடு எமக்கு நம்பிக்கையைத் தந்தது.

ஏழு வருடங்களாக செய்தி ஆசிரியராக பணியாற்றிய நான் சிவனேசச்செல்வன் இலங்கை பத்திரிகை தாபனத்தின் இதழியல் கல்லூரி விரிவுரையாளராக பதவியேற்றுச் சென்ற பின்னர் தினக்குரலின் பிரதம ஆசிரியராகப் பொறுப்பேற்றேன். நான் தினக்குரலில் சுமார் 15 வருடங்கள் பணியாற்றினேன். அந்தக் காலப்பகுதியில் பத்திரிகைக்கு விடயதானங்களை பங்களிப்புச் செய்யக்கூடியவர்களை தேடிப்பிடிக்கும் பணியையும் செய்ய வேண்டியிருந்தது. புதிய பத்திரிகைக்கு எழுதுவதால் என்ன பயன் என்று அலுத்துக் கொண்டவர்களும்

தொடர்ச்சி▼

# தமிழ்ப் பத்திரிகை உலகிலும் தனக்கென்று தனித்துவத்தைக் கொண்ட எஸ்.பி.சாமி ஐயா

தொடர்ச்சி▲

உண்டு. கல்விமான்கள், எழுத்தாளர்களின் வீடுகளுக்கு என்னைக் கூட்டிச் சென்று அவர்களுடன் சாமி அவர்கள் பேச வைத்த நாள்களை இன்று நினைத்துப் பார்க்கிறேன்.

சாமி அவர்களின் கல்விப்பின்புலம் வலுவானதாக இல்லாவிட்டாலும் கூட கற்றறிந்தவர்களுடனான அவரது சுலபமான ஊடாட்டம் எம்மை பிரமிக்கவைத்தது. சமூகத்தின் எந்த மட்டத்தவர்களுடனும் இலகுவாக பரிச்சயத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு வியக்கத்தக்க ஆளுமை அவரிடம் இருந்தது. இதை காலஞ்சென்ற பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி என்னிடம் நேரடியாகவே பல தடவைகள் கூறியிருக்கிறார். சமூகத்தில் பல தரப்பினரதும் மதிப்புக்குரியவராக சாமி அவர்கள் விளங்கினார்.

ஆசிரிய பீடத்தின் சுயாதீனமான செயற்பாடுகளுக்கு அவர் ஒருபோதும் இடையூறாக இருந்ததில்லை என்பதை ஒரு நீண்டகாலப் பத்திரிகையாளன் என்ற வகையில் வெளிப்படையாகக் கூறவேண்டியது எனது கடமையாகும். எமது சுயாதீனமான செயற்பாட்டுக்கு அவர் மேலும் உறுதுணையாக இருந்தார் என்றே கூறவேண்டும். வெளியார் சிலர் செய்த முறைப்பாடுகள் காரணமாக சாமி அவர்களுக்கும் நான் உட்பட ஆசிரிய பீடத்தின் மூத்த உறுப்பினர்களுக்கும் இடையில் அவ்வப்போது உரசல் ஏற்பட்டாலும், அதை தனது தொழிற்துறை அனுபவத்துடனும் முதிர்ச்சியுடனும் மிகவும் இலாவகமாகக் கையாளுவதிலும் முரண்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதிலும் அவர் சமர்த்தர். அவர் ஈடுபட்ட சகல வர்த்தக முயற்சிகளினதும் வெற்றிக்கு அதுவே நிச்சயமான காரணம் எனலாம்.

வெவ்வேறு துறைகளில் குறிப்பாக, தனியார் மருத்துவத்துறையில் முதலீடுகளைச் செய்வதில் நாட்டம் கொண்டிருந்த காரணத்தால் பிற்காலத்தில் சாமி அவர்கள் தினக்குரலின் முகாமைத்துவத்தில் செய்த மாற்றம் எம்மில் பலரை எமது பத்திரிகைத் துறைத் தொட்டிலான வீரகேசரி வளாகத்துக்குள்ளேயே மீண்டும் கொண்டு போய்விட்டது. தன்னை நம்பி வந்தவர்களின் எதிர்கால நலன்களை உறுதி செய்யவேண்டும் என்பதில் அவர் காட்டிய அக்கறையை எம்மால் காணக்கூடியதாக இருந்தது. அது குறித்து பல்வேறு கருத்துக்கள் இருக்கின்ற போதிலும், தினக்குரலின் தொடர்ச்சியை புதிய நிருவாகம் உறுதி செய்யும் என்ற நம்பிக்கை அதன் ஊழியர்களுக்கு வலுவாக இருக்கிறது.

சாமி அவர்கள் வர்த்தகத்துறையுடன் தன்னை மட்டுப்படுத்திக் கொண்டவர் அல்லர். வடக்கிலும் தலைநகரிலும் சமூக, சமய அமைப்புக்கள் பலவற்றின் தலைவராகவும் அவர் நீண்டகாலம் பயனுறுதியுடைய பணியைச் செய்துவந்திருக்கிறார். அரசியல் தலைவர்கள் பலருடனும் கூட நெருக்கமான பழக்கத்தைக் கொண்டிருந்த போதிலும், அரசியலில் ஒரு போதும் அவர் ஈடுபாடு காட்டியவரல்லர். தினக்குரல் காரணமாக அரசியல்வாதிகளுக்கு அவர் வேண்டியவரானார்.

அவருடன் இருபது வருடங்களுக்கும் மேலாக பணியாற்றிய அனுபவம் எனக்குப் பல படிப்பினைகளை தந்திருக்கிறது. வர்த்தகத்துறையின் பல்வேறு கிளைகளிலும் அவர் கால்பதித்த போதிலும், பிற்காலத்தில் கைவைத்த பத்திரிகைத் துறையே தொழிற்துறை அடையாளங்களில் அவருக்கு முக்கியமானதாக விளங்குகிறது என்பது அதில் அவருடன் பணியாற்றிய எமக்கு ஒருவித மனத் திருப்தியைத் தருகிறது.

இந்த உலகில் பிறந்தவர்கள் எல்லோரும் ஒரு நாள் இறக்கத்தான போகிறோம். மரணம் எவரையும் விட்டுவைக்கப் போவதில்லை. ஆனால், வாழும் காலத்தில் நாம் செய்கின்ற பணிகளின் மூலமாக, வாழும் முறையின் மூலமாக எத்தகைய மரபை விட்டுச் செல்கிறோம் என்பதே முக்கியமானது. அந்த வகையில் நோக்கும்போது சாமி அவர்கள் வர்த்தகத்துறையிலும் சமூக சேவையிலும் வளமான மரபை விட்டுச் செல்கிறார். அது குறித்து அவரின் குடும்பத்தவர்கள் என்றென்றைக்கும் பெருமைப்படமுடியும்.

நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு முன்னர் என்று நினைக்கிறேன், சாமி அவர்களை யாழ்ப்பாணம் நல்லூரில் செட்டித்தெருவில் உள்ள அவரது வீட்டில் சென்று சந்தித்துப் பேசினேன். அதற்கு பிறகு அவரைச் சந்திப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை என்பது துதிர்ஷ்டவசமானது. ஆனால் மீண்டும் அவரது வீட்டுக்கு அவருக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்கே செல்லப்போகிறேன் என்பதை கனத்த மனதுடன் நினைத்துக் கொள்கிறேன். அவர் முழுமையான ஒரு வாழ்வை வாழ்ந்தவர். அவரை இழந்து வாடும் மனைவி வீரலட்சுமி அம்மையாருக்கும் அவர்களது புதல்வர்கள், புதல்விகள் உட்பட குடும்பத்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

நான் எழுதுவதற்கு ஒரு பத்திரிகையை வெளியிட்ட சாமி ஐயாவுக்கு இறுதியில் பத்திரிகைகளில் அஞ்சலிக்குறிப்பை எழுதிக் கொண்டிருக்கிறேன். மரணமடைவதை பெரும்பான்மையானவர்களுடன் இணைவதாக (Joining the majority) கூறும் முதுமொழி ஒன்று இருக்கிறது. உலகில் வாழ்பவர்கள் அல்லர், காலமானவர்களே பெரும்பான்மையினர். சாமி ஐயா பெரும்பான்மையுடன் இணைந்துவிட்டார். நாங்கள்தான் சிறுபான்மையினர்.

சமூகத்தில் எனக்கு ஏதாவது அடையாளம் இருக்குமானால் அதற்கு காரணமானவர்களில் சாமி அவர்களும் ஒருவர். சென்று வாருங்கள் சாமி ஐயா! உங்களை நினைத்துக் கொண்டிருப்பதை தவிர எங்களால் என்ன செய்யமுடியும்!





# கஜேந்திரன், வாசுகி, வேலன் சுவாமிகளின் வாக்குமூலங்கள் பலாலி பொலிஸார் பதிவு

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம் தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், வாசுகி சுதாகரன், வேலன் சுவாமிகள் உள்ளிட்டோர் நேற்றைய தினம் வாக்குமூலம் பெறுவதற்காக பலாலி பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டனர்.


தையிட்டி விகாரைப் பகுதியில் கடந்த 12 ஆம் தேதி மேற்கொள்ளப்பட்ட போராட்டத்து தொடர்பில் விகாரையின் பிக்கு வழங்கிய முறைப்பாட்டிற்கு அமைய பொலிஸாரால் இந்த வாக்குமூலம் பெறப்பட்டது.

இதற்காக மேற்படி மூவரையும் நேற்று நண்பகல் 12 மணிக்கு சமுகம் அளிக்குமாறு தெரிவித்த பொலிஸார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் அவர்களை காத்திருக்கச் செய்து அதன் பின்னர் நீண்ட நேரம் அவர்களிடம் வாக்கு மூலம் பெற்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சட்டவிரோத விகாரை அமைப்புத் தொடர்பாக பிரதேச செயலகம் மற்றும் அரச திணைக்களங்களிடம் முறைப்பாடு அளிக்கப்பட்டது. அது தொடர்பில் பொலிஸார் பல கோணங்களில் கேள்விகளை எழுப்பினர் என்ச் விசாரணைக்குட்படுத்தப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் இந்த விகாரை அமைக்கப்பட்ட இடம் மக்களின் உறுதியுள்ள காணிகள் என்பதைத் தெரிவித்துள்ளார். அதனை அரச திணைக்களங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்த விடயத்தைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்திய நிலையில் தாம் இந்த விகாரை அகற்றப்படும் வரை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவோம் என செல்வராஜா கஜேந்திரன் குறிப்பிட்டார்.



# தசுன் சானக்கவிற்கு 10,000 டொலர் அபராதம்

விளையாட்டு ஒப்பந்தம் தொடர்பான விதிமுறைகளை மீறியமையால் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் தசுன் சானக்கவிற்கு இலங்கை கிரிக்கெட்டினால் 10,000 டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ காரணங்களை குறிப்பிட்டு தசுன் சானக்க, இலங்கை கிரிக்கெட்டினால் நடத்தப்படும் கழகங்களுக்கு இடையிலான 3 நாள் போட்டித் தொடரின் போட்டியொன்றை நிராகரித்துள்ளார்.

இதற்கான மருத்துவ சான்றிதழை சமர்ப்பித்த தசுன் சானக்க, அன்றைய தினமே டுபாய்க்கு பயணித்து அங்கு நடைபெறும் டுபாய் சர்வதேச லீக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்றுள்ளார்.

இதனூடாக இலங்கை கிரிக்கெட்டிற்கும் தசுன் சானக்கவிற்கும் இடையிலான விளையாட்டு ஒப்பந்தம் தொடர்பான விதிமுறைகளை மீறப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது தசுன் சானக்க கவலை வெளியிட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# செம்மணி இந்து மயான மனிதப் புதைகுழி தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை கோரப்படுகிறது





யாழ்ப்பாணம் செம்மணி சிந்துப் பாத்தி இந்து மயானத்தில் உள்ள மனிதப் புதைகுழியை நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் ஆனந்த ராஜா பார்வையிட்ட நிலையில் அந்த மனிதப் புதை குழி தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவு விடுத்துள்ளார்.

கடந்த வாரம் அந்த மயானத்தில் நல்லூர் பிரதேச சபையினால் மின்தகன எரியூட்டி அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

எரியூட்டி அமைப்பதற்காக நல்லூர் பிரதேச சபையினால் ஒப்பந்தகாரர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய எரியூட்டி அமைப்பதற்காகக் கிடங்கு வெட்டிய போது மண்டையோடு உட்பட்ட மனித எச்சங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து ஒப்பந்தகாரரினால் நல்லூர் பிரதேச சபைக்கு இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக சம்பவ இடத்திற்கு வருகை தந்த பிரதேச செயலர் உள்ளிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மயான அபிவிருத்திப் பணிகளை பார்வையிட்டனர்.

இந்நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் அந்தப் பகுதிக்கு விஜயம் செய்தனர். அருகில் இருந்த இராணுவ முகாமில் புதைக்கப்பட்ட எலும்புக்கூடுகளை அகற்றும்போது அவை இந்தப் பகுதிக்குள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை அவர்கள் வெளியிட்டனர்.

இதன் அடிப்படையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் இந்த மனிதப் புதை குழி தொடர்பில் தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை வழங்கியிருந்தார்.

இந்நிலையில் நேற்றைய தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் ஆனந்தராஜா, சட்ட வைத்திய அதிகாரி மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகள் அந்தப் பகுதிக்குச் சென்றனர்.

அந்தப் பகுதியை பார்வையிட்ட நீதிவான் சட்ட வைத்திய அதிகாரியிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு விடுத்தார்.

அந்தப் பிரதேசத்தை அண்டிய பகுதியில் 2011 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உழவு இயந்திரத்தின் சுழல் கலப்பையில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று உயிரிழப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

திம்புள்ள பத்தனை இராவணா கொட பிரதேசத்தில் உழவு இயந்திரத்தின் சுழல் கலப்பையில் மோதி இராணுவத்தில் பணிபுரியும் நபர் ஒருவர் நேற்று மாலை உயிரிழந்துள்ளார் என திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விஜயபாகு கந்த, மஹாவலிகம ஹவன்வெவ பிரதேசத்தில் வசித்து வந்த கொட்டகேபிட்டிய பகுதியைச் சேர்ந்த தசந்த சந்திக ஹேரத் (வயது32) என்ற திருமணமான இராணுவ சிப்பாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் இராணுவ சேவையிலிருந்து விடுமுறையில் வீடு திரும்பியதும், உழவு இயந்திரத்தில் தனது வயலை தயார் செய்வதற்காக அதனை ஸ்டார்ட் செய்திருக்கின்றார். அப்போது எதிர்பாராதவிதமாக உழவு இயந்திரத்தின் சுழலும் கலப்பையில் சுற்றப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்





என ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சடலம் சுழலும் கலப்பையில் சுற்றப்பட்டிருந்த நிலையில், ஹட்டன் நீதிவான் வந்து சடலத்தை பார்வையிட்டதன் பின்னர் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

# சுவிஸ் குமாரை தப்பிக்க உதவிய குற்றச்சாட்டு முன்னாள் சிரேஷ்ட டி.ஐ.ஜிக்கு 4 வருடச் சிறை

## வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு



(கி.வசந்தன்)

வித்தியா கொலை வழக்கு குற்றவாளிகளில் ஒருவரான சுவிஸ் குமாரை தப்பிக்க உதவிய குற்றச் சாட்டில் வட மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்க மற்றும் சப் இன்ஸ்பெக்டர் சிறிகஜனுக்கும் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.மிஹால் 4 வருட சிறைத் தண்டை வழங்கி தீர்ப்பளித்தார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் குற்றவாளியான சுவிஸ்குமாரை தப்பிக்க உதவிய வழக்கு நேற்று வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்றது.

இதன்போது சுவிஸ்குமாரை பணம் பெற்று தப்பிக்க உதவிய குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்ட நிலையில் அப்போதைய வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜெயசிங்கவுக்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 50 ஆயிரம் ரூபா குற்றப்பணமும் செலுத்த உத்தரவிடப்பட்டது.

மற்றைய சந்தேக நபரான பொலிஸ் உத்தியோகத்தர் சிறிகஜனுக்கும் 4 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன், அவர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றமையால் அவருக்கு திறந்த பிடியாணையும் வவுனியா மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களம் சார்பாக அரச சட்டத்தரணி நிசாந் நாகரட்ணம் நெறிப்படுத்தியிருந்தார்.

# கொழும்பு நீதிமன்றுக்குள் நடந்த துப்பாக்கிச் சூடு; கண்டித்து வவுனியா மேல் நீதிமன்றம் முன் பதாதை







(கி.வசந்தன்)

கொழும்பு நீதிமன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்குக் கண்டனம் தெரிவித்து வவுனியா மேல் நீதி மன்றம் முன்பாக பதாதை காட்சிப்படுத்தப்பட்டது.

இந்தப் பதாதை அகில இலங்கை நீதிமன்ற ஊழியர் சங்கத்தால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

“திறந்த நீதிமன்றத்தில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டு பிரயோகத்தை வன்மையாக கண்டிக்கிறோம். கௌரவ நீதிபதிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லையா..?“ – என அப்பதாதையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிலக்கரி மின்னுற்பத்தி நிலையத்துக்குப் பதிலாக சம்பூரில் சூரியசக்தி மின்னுற்பத்தி நிலையம் வரும்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை சம்பூரில் முதலாம் கட்டத்தில் 50 மெகாவோற் மற்றும் இரண்டாம் கட்டத்தில் 70 மெகாவோற் சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்காக இலங்கை அரசு மற்றும் இந்திய அரசு ஆகியவற்றுக்கு இடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இரண்டு அரசுகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் திட்டமாக இலங்கை மின்சார சபை மற்றும் இந்திய தேசிய அனல் மின்சார கூட்டுத்தாபனத்தின் கூட்டு தொழில்முயற்சி கம்பனி ஆகியவற்றால் நிர்மாணித்தல், உரிமை வகித்தல் மற்றும் அமுல்படுத்துதல் அடிப்படையில் இத்திட்டம் நிறுவப்படவுள்ளது.

திருகோணமலை சம்பூரில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்த நிலக்கரி மின்னுற்பத்தி நிலைய திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இலங்கை மின்சார சபை மற்றும் இந்தியாவின் தேசிய அனல் மின்சாரக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றால் கூட்டு தொழில் முயற்சி கம்பனியாக நிறுவப்பட்ட அமைப்பின் மூலம் உத்தேச 50 மெகாவோற் சூரிய மின்னுற்பத்தி திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவின் மகா கும்பமேளாவில் நீராட சென்ற பெண்கள் பலர் மாயம்



இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தின் மகா கும்பமேளா நிகழ்விற்கு உலகம் முழுவதிலும் இருந்து பல லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து திரிவேணிசங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

இதுவரையில் சுமார் 55 கோடிக்கும் அதிகமான மக்கள் திரிவேணிசங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

இந்நிலையில், தென்காசி பகுதியில் இருந்த 40 பேர் கொண்ட குழு ஒன்று ரயில் மூலம் உத்தரப்பிரதேச மாநிலத்தின் மகா கும்பமேளா நிகழ்விற்கு வருகை தந்துள்ளனர்.

இந்த குழுவினரில் கும்பமேளாவில் நீராடி விட்டு அயோத்திக்குச் சென்ற இரண்டு தமிழக பெண்கள் காணாமல் போயுள்ளனர் தெரிவிக்கப்படுகின்றது.

மகா கும்பமேளா சென்ற தமிழக பெண்கள் காணாமல் போன சம்பவம் தொடர்பாக உத்தரப்பிரதேச பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி எஸ்.ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்



இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 3 படகுகளுடன் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 10 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், இப்பிரச்சனைக்கு நிரந்தரமாக தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் கடந்த சில மாதங்களாக அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டிய முதல்வர், மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் வாழ்வாதாரம் நீண்ட காலம் பாதிக்கப்படுவதால், இத்தகைய கைது நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# டில்லியின் முதல்வராக பதவியேற்றார் ரேகா குப்தா



டில்லியின் புதிய முதல்வராக ரேகா குப்தா நேற்று பதவியேற்றுக் கொண்டார். டில்லி ராம்லீலா மைதானத்தில் நடந்த பிரம்மாண்ட விழாவில் பிரதமர் மோடி முன்னிலையில் பதவி ஏற்றுக்கொண்டார். துணைநிலை ஆளுநர் வி.கே.சக்சேனா அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

ரேகா குப்தாவின் பதவியேற்பு விழாவில் பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், மத்திய அமைச்சரும் பா.ஜ.க. தலைவருமான ஜெ.பி. நட்டா, ஹரியானா முதல்வர் நயாப் சிங் சைனி, ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

டில்லியில் 27 ஆண்டுகளுக்குப் பின்பு பா.ஜ.க 3 இல் 2 பங்கு பெரும்பான்மை பெற்று 48 எம்.எல்.ஏ.க்களுடன் ஆட்சியை அமைத்துள்ளது. அதன்படி, டில்லியின் புதிய முதல்வராக ரேகா குப்தா நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

முதல்வர் ரேகாவுடன், பா.ஜ.க. எம்.எல்.ஏக்களான பர்வேஷ் வர்மா, மஞ்சிந்தர் சிங் சிர்சா, கபில் மிஸ்ரா, ஆஷிஷ் சூட், பங்கஜ் குமார் சிங் மற்றும் ரவிந்தர் இந்த்ராஜ் சிங் ஆகியோர் அமைச்சரவை அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

# நாடு கடத்தப்பட்டோர் பனாமாவில் தங்க வைப்பு





அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்டு சட்டவிரோதமாகப் புலம்பெயர்ந்தோர் தற்போது பனாமாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுமார் 299 புலம்பெயர்ந்தோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆவணமற்ற வெளிநாட்டினருக்கு எதிரான பாரிய அடக்குமுறையின் ஒரு பகுதியாக இவர்கள் பனாமாவின் தலைநகரில் அமைந்துள்ள Decápolis என்ற சொகுசு ஹோட்டலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச அதிகாரிகளால் ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கையில் தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்புவதற்கான ஏற்பாடுகளுக்காகக் காத்திருக்கும் போது, இந்த நபர்கள் ஹோட்டலை விட்டு வெளியேற அனுமதிக்கப்படவில்லை என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சட்டவிரோத குடியேற்றவாசிகள் தொடர்பில் சமூக ஊடகங்களில் பரவி வரும் படங்கள் மற்றும் காணொலிகள், ஹோட்டலின் ஜன்னல்களில், “தயவு செய்து எங்களுக்கு உதவுங்கள்” மற்றும் “நாங்கள் பாதுகாப்பாக இல்லை” என்று நாடுகடத்தப்பட்டவர்கள் வாசனங்களை எழுதி வெளிப்படுத்தியுள்ளனர்.

அதே நேரத்தில் பொலிஸ் அதிகாரிகள் ஹோட்டல் வளாகத்தில் பாதுகாப்பில் இருப்பதனையும் காண முடிகின்றது.

அசோசியேட்டட் பிரஸ் செய்திச் சேவையின் அறிக்கையின்படி, நாடு கடத்தப்பட்ட சுமார் 300 பேரில் பெரும்பாலானோர் இந்தியா, நேபாளம், இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சீனா, வியட்நாம் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இவர்கள் நாடுகடத்தப்படுவதில் அமெரிக்கா சிரமங்களை எதிர்கொள்வதால் பனாமா ஒரு தடுப்பு நிலையமாக பயன்படுத்தப்படுகிறது.

எவ்வாறெனினும், இதற்கு பதிலளித்துள்ள பனாமாவின் பாதுகாப்பு அமைச்சர் பிராங்க் அப்ரேகோ, புலம்பெயர்ந்தோரின் சுதந்திரம் பறிக்கப்படவில்லை என்றும் அவர்கள் அவர்களின் பாதுகாப்பிற்காக எங்கள் காவலில் உள்ளனர் என்றும் கூறினார்.

பனாமாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான குடியேற்ற ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக நாடு கடத்தப்பட்டவர்கள் மருத்துவ உதவி மற்றும் உணவைப் பெற்று வருவதாகவும் செய்தியாளர்களிடம் பேசிய அப்ரிகோ உறுதிப்படுத்தினார்.

இந்த மாத தொடக்கத்தில் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் மார்கோ ரூபியோ பனாமாவிற்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து, மத்திய அமெரிக்க நாடு, நாடு கடத்தப்பட்டவர்களுக்கு “பாலம்” அல்லது போக்குவரத்து நாடாக சேவை செய்ய ஒப்புக்கொண்டது.

அதேநேரத்தில், வொஷிங்டன் இதற்கான அனைத்து செலவுகளையும் ஏற்கிறது.



# இன்றைய ராசி பலன்கள் - 21.02.2025




இன்று அனைத்தும் சுமூகமாக நடக்கும். நம்பிக்கை உணர்வு உங்களை வெற்றியின் உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

பணியிடத்தில் பிரகாசமான வளர்ச்சி காணப்படும். பணியிடத்தில் உங்களிடம் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பையும் காதலையும் வெளிப்படுத்துவீர்கள். உங்களின் நண்பர் வீட்டு திருமண விழாவில் கலந்து கொண்டு இருவரும் இனிமையான தருணங்களைக் கழிப்பீர்கள்.

பணப்புழக்கம் அபரிமிதமாக காணப்படும். உங்கள் பணத் தேவைகளை உங்களால் பூர்த்தி செய்து கொள்ள முடியும். இது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் ஆற்றல் காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




எதிர்மறை விளைவுகளை தடுக்க இந்து எந்த செயலையும் தொடங்குவதற்கு முன் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதங்கள் காணப்படும். நற்பலன்கள் காண்பதற்கு பொறுமை அவசியம்.

பணியிடத்தில் ஏதுவான சூழ்நிலை இருக்காது. இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைப்பது அவசியம்.

கவனமற்ற வார்த்தைகளின் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். விஷயங்களை லேசாக எடுத்துக்கொண்டு உங்கள துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பது சிறந்தது.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. கூடுதல் செலவினங்கள் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று உங்கள் இலக்குகள் குறைந்து காணப்படும். உங்கள் இலக்குகளை அடைய நினைத்தாலும் அதனை செய்து முடிப்பதில் பல கடினங்களை எதிர்கொள்ள நேரும். சோதனையான இந்த தருணத்தில் பொறுமையுடன் இருக்க வேண்டியது அவசியம்.

பணியிடத்தில் சிறப்பான பலன்கள் கிட்டாது. பணிகள் முடிக்கப்படாமல் நிலுவையில் இருக்கும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். பணியில் மந்த நிலை காணப்படும்.

நீங்கள் அமைதியிழந்து காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதி வளர்ச்சிக்கு இது சாதகமான நாள் அல்ல. குழந்தைகள் நலனுக்காக செலவு செய்ய நேரும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். சமநிலையான அணுகுமுறை காணப்படும். நீங்கள் சரியான முடிவுகளை எடுப்பீர்கள். அமைதியையம் திருப்தியையும் உணர்வீர்கள்.

உங்கள் திறமைக்காக உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு பெறுவீர்கள். பணியின்போது உங்கள் தனித்துவமான திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் சேர்ந்து இன்றைய நாளை கழிப்பீர்கள். இருவரும் சேர்ந்து நண்பர் வீட்டு விழாவுக்கு செல்வீர்கள். இதனால் இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியம்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும் இன்று பணம் சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று பூரணமான ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் யோசிக்க வேண்டும். அவநம்பிக்கை மற்றும் பாதுகப்பின்மை உணர்வை தவிர்க்க வேண்டும். சம்பவங்கள் மாறாக நடந்தாலும், நம்பிக்கையோடு அதனை எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிச்சுமைகள் அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் உங்கள் பணிகளை முடிக்க நீங்கள் சிறப்பான முறையில் திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை உங்களால் பராமரிக்க இயலாது. உங்களின் எரிச்சலான உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பணவரவு குறைந்து காணப்படும். அதிக செலவுகள் இருக்கும் காரணத்தால் போதிய அளவு பணம் சேமிக்க இயலாது.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபடுவதன் மூலம் இந்தச் சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம். இன்று செயல்களில் மும்மரமாக ஈடுபட்டு சாவல்களை சமாளிக்க வேண்டும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். சுமூகமான பலன்கள் கிடைக்க நீங்கள் சிறந்த யுத்திகளைக் கையாள வேண்டும். உங்கள் பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காட்டுவதை தவிர்க்க வேண்டும். உறவின் நல்லிணக்கத்தைப் பேண கவனமாக வாரத்தைகளை பயன்படுத்த வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய நாள் அனுகூலமானதாக இருக்காது. அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும்இருக்க வேண்டியது அவசியம். இன்றைய ஏற்ற இறக்கமான சூழ்நிலைகளை சமாளித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இன்று கவனம் மிகவும் தேவை.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த நீங்கள் முயல வேண்டும்.

நிதிநிலைமை இன்று அனுகூலமாக இருக்காது. கூடுதல் செலவினங்கள் காணப்படும். இதனால் அதிருப்தி நிலவும்.

இன்று பதற்றத்துடன் காணப்படுவீர்கள். அது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று உறுதியான நாள். நம்பிக்கையோடு எடுக்கும் முக்கியமான முடிவுகள் உங்கள் வளர்ச்சிக்கு உதவும். நீங்கள் இன்று உறுதியுடனும் உற்சாகத்துடனும் காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் செயல்திறனுக்கு பாராட்டு பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நம்பிக்கையாக நேர்மையாக நடந்துகொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்லுறவு பராமரிக்கப்படும்.

பணப்புழக்கம் தேவையைவிட அதிகமாக இருக்கும். பணத்தை சேமித்து பாதுகாப்பை அதிகரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும். நேர்மறை எண்ணங்களால் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.02.2025




இன்று நம்பிக்கையான நாள். உங்கள் இலக்குகளை அடைய இன்று நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகளின் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்கள் பணியைப் பொறுத்த வரை இன்று பாதுகாப்பான நிலையில் இருப்பீர்கள். உங்களின் சிறந்த செயல்திறனுக்கு நற்பெயர் கிடைக்கும்.

குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்சிகள் உங்களை உற்சாகப்படுத்தும். உங்கள் துணையிடம் நல்லுறவை ஏற்படுத்துவீர்கள்.

நிதிநிலை வளர்ச்சி மகிழ்ச்சியை அளிக்கும். நிதி நிலையில் அதிர்ஷ்டத்தை அனுபவிக்க ஏதுவான சூழ்நிலை காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை உணர்வுகளைத் தவிர்க்க வேண்டும். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள்.

பணியிடச் சூழல் அமைதியை அளிக்காது. சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் இடையூறுகள் காணப்படும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். கவனமற்ற வார்த்தைகளை உங்கள் துணையிடம் உதிர்ப்பீர்கள். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் அத்தகைய வார்த்தைகளை தவிர்ப்பது நல்லது.

நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. இன்று தேவையற்ற வீணான செலவுகள் காணப்படும்.

சளி மற்றும் தோல் எரிச்சல்கள் ஏற்படலாம். எண்ணெய்ப் பதார்த்தங்கள் உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் வளர்ச்சியில் சில இடையூறுகளை நீங்கள் சந்திக்க நேரும். விவேகமாக சிந்தித்து செயல்படுவது நல்லது.

உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும். அதிக பணிகள் காரணமாக தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் பேசும் போது கவனம் தேவை. மகிழ்ச்சியை தக்க வைக்க இது மிகவும் அவசியம்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். இன்று பண வரவுக்கான அதிர்ஷ்டம் குறைவு. போதிய அளவு பணம் கையில் இருக்காது.

முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. இன்று தியானம் மற்றும் யோகா மேற்கொள்வது உடல் நலத்துக்கு நல்லது.




இன்று அனுகூலமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். நல்ல வளர்ச்சி காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள்.

உங்கள் பணிகளை இடையூறின்றி ஆற்றுவீர்கள். பல புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இனிமையான வார்த்தைகளைப் பேசுவீர்கள். வெளியிடங்களுக்கு சென்று வர திட்டமிடுவீர்கள்.

உங்களிடம் உள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். நிதிநிலைமை சிறப்பாக இருக்கும்.

உங்கள் உடல் நலத்தை சிறந்த முறையில் பராமரிப்பதால் இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் கானப்படுவீர்கள்.

# அமெ. தூதர் – சஜித் நேற்று சந்திப்பு





இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.இருவருக்குமிடையிலான இந்த பிரத்தியேக சந்திப்பு சுமார் ஒரு மணித்தியலாம் அளவில் இடம்பெற்றது.